**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224834

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.01.2022

Accepted: 10.03.2022

Published: 01.04.2022

Citation:
Askar Ali, M. "Islamic 'Bakhirs.'" *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 4, 2022, pp. 121–25.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4834

*Corresponding Author:
askarsuperstar@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Islamic 'Bakhirs'

**M. Askar Ali**
*Head, Tamil Department*
*Acharia College of Arts and Science, Puducherry, India*

**Abstract -** The lives of Islamists around the world are fundamentally religious. More than that, it is subject to the rules taught by that "religious community." In such a religious life, the duality of being centered and marginalized becomes inevitable. Thoppil Mohammad Meeran and Keeranur Jagirrajah are the creator of the myths about the marginalized community in the creative field. The lives of various marginalized people as a result of the central political attitude are portrayed as diverse in their fiction. They have written about the marginalized mantras of sex workers, homosexuals, mercenaries, brokers, thieves, drunkards, psychiatrists, beggars, etc., unfamiliar with most Islamic myths. His works also record non-seafaring fishing Islamists, Bakhirs (wanderers), Osaks (sailors), and Motinars (front-line servants in mosques). In this context, this article examines in detail how Keeranur Zakir Raja translated into literature the record of Bakhirs living a nomadic life in the Islamic community.

**Key Words:** Keeranur Zakir Raja, Center for Islam and Bakhir, Thoppil Mohammad Meeran

**References**

1. Bhaktavasla Bharathi, C., Nomads in Tamil Nadu, p.291.
2. Muhammad Khan Fazil Bhagwati, A., Islam and Economics, p.147.
3. Rifai, AK, Islamic History in Tamil Nadu, p.214.
4. Keeranur Jagirrajah, Metropolitan Notes, pp.100-103.

# இஸ்லாமியப் பக்கீர்கள்

***முனைவர் மௌ. அஸ்கர் அலி***
தமிழ்த்துறைத் தலைவர்
ஆச்சாரியா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி

***ஆய்வுச்சுருக்கம்***
*இஸ்லாமியர்களின் வாழ்க்கை உலகம் முழுவதிலுமே அடிப்படையில் சமயம் சார்ந்தது. அதைவிட மேலாக அச் சமயச் சமூகம் கற்பிக்கும் விதிகளுக்கு உட்பட்டது. இத்தகைய ஒரு சமய வாழ்வில் மையம் சார்ந்தவர்கள் X விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் என்ற இருமை நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. விளிம்புநிலைச் சமூகம் குறித்த புனைவுகளைப் படைப்புலகில் கொண்டாடியவர்களாகத் தோப்பில் முஹம்மது மீரான், கீரனூர் ஜாகிர்ராஜா ஆகியோர் உள்ளனர். இப்படைப்பாளர்கள் மேற்கண்ட மையம் X விளிம்பு என்னும் இருமை எதிர்வுகள் உண்டாக்கிய அதிர்வுகளை மொழிப்படுத்தியுள்ளனர். மைய அரசியல் மனோபாவத்தின் விளைவாக உருவான பல்வேறு விளிம்புநிலையினரின் வாழ்க்கை இவர்களது புனைகதைகளில் பன்முகத்தன்மையுடையதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான இஸ்லாமியப் புனைகதைகளில் அறிமுகமாகாத பாலியல் தொழிலாளர்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், கூலிகள், தரகர்கள், திருடர்கள், குடிகாரர்கள், மனநோயாளிகள், பிச்சைக்காரர்கள் முதலிய விளிம்புநிலை மாந்தர்களை இவர்கள் இலக்கியமாக்கியுள்ளனர். மேலும் கடல் தொழில் செய்யாத மீனவ இஸ்லாமியர்கள், பக்கீர்கள் (இருப்பிடமின்றி அலைந்து திரிபவர்கள்), ஒசாக்கள் (நாவிதர்கள்), மோதினார்கள் (பள்ளிவாசல்களில் கடைநிலை ஊழியம் செய்வோர்) ஆகியோரையும் இவர்களது படைப்புகள் பதிவு செய்துள்ளன. இந்நிலையில் இஸ்லாமியச் சமூகத்தில் கடைகோடி நிலையில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வரும் பக்கீர்கள் பற்றிய பதிவைக் கீரனூர் ஜாகிர்ராஜா படைப்புகளில் எவ்வாறு மொழிப்படுத்தியுள்ளார் என்பதையே இக்கட்டுரை ஆராய்கிறது.*

***திறவுச் சொற்கள்:*** *இஸ்லாமியர்கள், பக்கீர்கள், மையம், விளிம்பு, இலக்கியங்கள், கீரனூர் ஜாகிர்ராஜா, தோப்பில் முஹம்மது மீரான்*

## பக்கீர்களின் பிரிவுகள்

இஸ்லாமியச் சமூகத்தில் விளிம்புநிலை அடையாளத்தோடு வாழ்ந்து வரும் ஒரு பிரிவினராகப் பக்கீர்கள் கருதப்படுகின்றனர். பக்கீர்கள் ஊர் ஊராகச் சுற்றி வாழ்பவர்கள். பக்கீர்கள் தார்வே, பாபா, பாவா, சாய், பீர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். எனினும் பக்கீர் என்பதே பரவலான வழக்காகும். பக்கீர்கள் இருவேறு பிரிவினராக அடையாளம் காணப்படுகின்றனர்.

1. ஆன்மிக வழியில் செல்பவர்கள்
2. பிச்சை எடுத்து வாழ்பவர்கள் (மிஸ்கீன்கள்)

“பக்கர்” என்பதற்கு ஓர் இனத்தைக் குறிக்கும் சொல் என்றும், பக்கீர்கள் என்பதற்கு இஸ்லாமியப் பரதேசி, இஸ்லாமிய யாசகர், பிச்சைக்காரர் என்றும் தமிழ் அகராதிகளில் சுட்டப்பட்டுள்ளன. “பக்ரு” என்ற அரபுச் சொல்லுக்கு வறுமை, இன்மை என்று பொருள். அதாவது வாழ்க்கையில் எவ்வித வசதியும் இல்லாதவர்கள் என்பது இதன் பொருள்”[1].

## பக்கீர்களின் வாழ்வியல்

பக்கீர்கள் ஊர்ஊராகச் சுற்றித் திரியும் நாடோடிகளாக உள்ளனர். இவர்களின்,

*அன்றாட வாழ்க்கை என்பது ஊர் ஊராகச் சுற்றி யாசகம் கேட்டு வாழ்வதே ஆகும். பக்கீர்கள் என்பவர்கள் மிஸ்கீனைவிட மிகவும் வறியவர்கள். ஏனெனில் பக்கீர் என்னும் சொல் ஒன்றுமே இல்லாதவர்களையும், மிஸ்கீன் என்பது ஏதோ சிறிது பொருள் இருந்தாலும் தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் போதுமான அளவுக்கு வருமானம் இல்லாதவர்களைக் குறிப்பதாகவும் உள்ளது. இதற்கு ஆதாரமாகப் பின்வரும் திருக்குர்ஆன் வசனம் ஒன்று அமைந்துள்ளது: "அந்த மரக்கலம் சமுத்திரத்தில் (கூலி) வேலை செய்து கொண்டிருக்கும் ஏழைகள் (மிஸ்கீன்கள்) சிலருடையது"[2] (18:79). மரக்கலத்தின் உரிமையாளர்களை "மிஸ்கீன்கள்" என மறைநூல் குறிப்பிட்டதிலிருந்து, சிறிது பொருள் வைத்திருப்பவர்களுக்கு "மிஸ்கீன்" என்ற அடையாளம் பொருந்துவதாகவே உள்ளது. மிஸ்கீன் என்பவர் மக்களிடம் தன் குறைகளைக் கூறி யாசிக்க மாட்டார். தன்னடகத்துடன் நடந்து கொள்வார் என்றும், பக்கீர் என்பவர் மக்களிடம் யாசிப்பவர் என்றும் வேறுபாடு காணப்படுகிறது. இதற்கு ஆதாரமாகப் பின்வரும் கருத்து அமைந்துள்ளது:-*

*"வேலையில்லாமல் அல்லது வேலை கிடைத்தாலும் வேலை செய்வதற்குச் சக்தி இல்லாதவராக இருப்பவர் பக்கீர் எனப்படுவர். மிஸ்கீன் என்பது நோயாளியான பக்கீரைக் குறிக்கும் என்கிறது இக்கருத்து. அதாவது மிஸ்கீனுக்கு இருவிதக் கஷ்டங்கள் உண்டு. ஒன்று வறுமை "மற்றொன்று நோய்"[3]. பக்கீர்கள் பற்றியும் அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தின் சமூக மற்றும் அரசியல் சூழல்கள் பற்றியும் ரிபாயி பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "கி.பி.17, 18ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கீசியர் எதிர்ப்பை முறியடிக்கவும், சுதந்திரக் கருத்துக்களைப் பரப்புவதற்கும், இசுலாமியக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துக் கூறுவதற்கும் பொருத்தமான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படை ஞானம் கற்றுக் கொடுக்கப்பட்டது. நாட்டு நடப்புகளும் அவர்களுக்கு விளக்கிச் சொல்லப்பட்டன. ஓரளவு அரசியல் தெளிவு பெற்றவர்களாகவும் அப்பிரச்சாரகர்கள் இருந்தனர். இவர்கள் பக்கீர்கள் என அழைக்கப்பட்டனர்"[4]*

*இஸ்லாமியச் சமயக் கருத்துக்களைப் பரப்புவதையே நோக்கமாகக்கொண்ட பக்கீர்கள், இஸ்லாமியர்கள் எங்கெல்லாம் மிகுதியாக வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தங்கியிருந்து சமயக் கருத்துக்களைப் பரப்பி வந்துள்ளனர். இஸ்லாத்தின் கடை நிலை வாழ்க்கை வாழும் பக்கீர்கள் "ஜகாத்" என்னும் கொடையை வீடுவீடாகச் சென்று வசூலிப்பவர்களாக விளங்குகின்றனர். எவ்வித வருவாயும் இன்றி பள்ளிவாசல், தர்கா போன்ற இடங்களில் பிச்சை எடுத்து வாழ்க்கையைக் கடத்துபவராக உள்ள பக்கீர்களைக் குறித்துக் கீரனூர் ஜாகிர்ராஜா பின்வருமாறு காட்சிப்படுத்துகிறார்:*

*"ஊர் நெருங்க நெருங்க மனம் பலவீனமாகிக் கொண்டே போனது. கூனிக் குறுகிப் போய் பள்ளிவாசலில் ஒதுங்கி நிற்பதும், தொழுகையாளிகளிடம் ஈனமாய் குரலெடுத்து சுய அறிமுகத்துடன் துண்டை விரித்து யாசகம் கேட்பதும், எல்லா விதமான பார்வைகளையும் எதிர்கொள்ள நேர்வதும், யா அல்லா இப்படிப்பட்ட வாழ்வை ஏன் கொடுத்தாய் என்று தான் கேட்க வைத்தது"[5]*

*பக்கீர்கள் தமிழகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழ்பவர்களாக உள்ளனர். சொந்தமான இருப்பிடம், நிலம் என்று எதுவும் கிடையாது. இஸ்லாமியர்கள் மிகுதியாக வாழும் ஊர்களிலேயே இவர்கள் சில காலம் தங்கி யாசகம் கேட்கின்றனர்.*

பிற சமய மக்களிடம் யாசகம் கேட்கும் வழக்கம் பக்கீர்களிடம் இல்லை. பல்வேறு ஊர்களுக்கு மாறிமாறிச் செல்லக்கூடிய இவர்கள் ஒரே இடத்தில் நிலைத்துத் தங்குவது கிடையாது.

பல்வேறு இடங்களுக்கு யாசகம் கேட்கச் செல்லும்போது அவ்வூரிலுள்ள தர்கா, பள்ளிவாசல் ஆகியவற்றில் தங்குகின்றனர். ஒவ்வொரு வீட்டிற்கும் யாசகம் கேட்கச் செல்லும் போது "அஸ்ஸலாமு அலைக்கும்" என்னும் இஸ்லாமிய மந்திரத்தைச் சொல்லிப் பொருளைப் பெறுகின்றவர்களாக இருக்கின்றனர். சமூகத்தில் இவர்களுக்கென அடிப்படை வசதிகள், உரிமைகள் எதுவுமில்லை. இவர்கள் நாடோடியாக வாழ்வதால் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே வாழ்ந்து உழல்கின்றனர்.

"அத்தா நடைபோடும் இயந்திரமாய் மாறியிருந்தார். அம்மாவும், அக்காவும் வெவ்வேறு காலகட்டங்களில் அவருடன் நடந்து நடந்து நொறுங்கியவர்கள். அம்மாவை ஆஸ்த்மா காப்பாற்றியது. அக்காவை வயசு. நெடுஞ்சாலைகளும், எல்லாவிதமான சீதோஷ்ணங்களும், யாசகக் குரல்களும், புறக்கணிக்கும் அத்தாவுக்கு ரத்தத்தில் கலந்தவை. அம்மாவை அவர் காட்டுவா தர்ஹாவில் கண்டெடுத்த நாள் முதல் ஒரு சர்வாதிகாரி போலத்தான் நடந்து கொண்டார். இதை விட்டொழித்து வேறு தொழில் பார்க்கலாம்ல என்றால் கோபம் பொசுக்கென்று வந்து, பையை தோளில் மாட்டிக்கொண்டு தனித்து நடக்கத் தொடங்குவார். அம்மாவோ, அக்காவோ, நானோ ஓடிப்போய் இணைந்து கொள்வோம். இனி நடந்தால் உடல் தாங்காது எனப் பெரிய ஆஸ்பத்திரி டாக்டர்கள் சொன்ன பிறகுதான் அம்மாவுக்கு விடுதலை கிடைத்தது. அந்த இடத்துக்கு அக்கா சிக்கிக்கொண்டதும் அப்போது தான்"[6] என்று பக்கீர்களின் வாழ்க்கைச் சமூகத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதைக் கீரனூர் ஜாகிர்ராஜா புலப்படுத்தியுள்ளார்.

**சமூகப் பாதுகாப்பற்ற நிலையில் பக்கீர்கள்**

இஸ்லாமியச் சமூகத்தில் நாடோடி வாழ்க்கை வாழும் பக்கீர்கள் சமூகத் தகுதி எதுவுமற்று, உயிருக்குப் பாதுகாப்புமற்று வாழ்வின் விளிம்பில் இருப்பதை அறிய முடிகிறது. இஸ்லாமியப் பண்பாட்டு மரபில் பக்கீர்கள் தொடர்ந்து விளிம்புநிலை மக்களாகவே இருந்து வருகின்ற வரலாறு இன்றும் தொடர்கிறது.

தர்காக்களில் ஆண்டிற்கு ஒரு முறை நடக்கின்ற உரூஸ், கந்தூரி (இறை நேசர்களின் நினைவு நாள்) போன்ற நாட்களில் செல்வர். அங்குப் பக்கீர்களிடம் இஸ்லாமியர்களும், பிற சமயத்தாரும் நம்பிக்கை சார்ந்த சில சடங்குகளைச் செய்வர். இஸ்லாமியப் பாடல்களைப் பாடி யாசகம் கேட்கின்ற பக்கீர்களைக் கீரனூர் ஜாகிர்ராஜா பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"ஏழு வயது முதல் பதினேழு வயது வரை அக்கா பத்து நீண்ட வருசுங்கள் நடந்து நொடிந்திருக்கிறாள் பாவம். ஊர் ஊராய் பட்டி தொட்டியாய் பள்ளிவாசல் உள்ள எல்லா இடங்களிலும், தர்ஹாக்களிலும் அத்தாவும் மகளும் டேரா போட்டிருக்கிறார்கள். அக்காவின் குரல் இனிமையானது என்பதை விடவும் எளிமையானது. கேட்பவரைக் கலங்கச் செய்து உடனே உதவிடத் தூண்டுகிறது. சந்தர்ப்பம் போல இதைப் பயன்படுத்திக் கொள்வதில் அத்தா தேர்ந்தவர். ஏகன் உண்மைத் தூதரே என்று எப்போதாவது அக்கா பாடுகிற நேரத்தில் என் கண்களறியாமல் நீர் கசிந்து விடும். பாவா என்று அவள் யாசகக் குரல் எடுக்கையில் என் நெஞ்சே வெடித்து விடும் போலிருக்கும். யாசகக் குரல். அதுவும் அக்காவின் சோகம் ததும்பிய யாசகக் குரல் எத்தனை துன்பமானது. ஒரு நாளேனும் அத்தா இதனை உணர்ந்ததில்லை"[7]

பக்கீர்களுக்கென்று தனியே தொழில்கள் எதுவும் கிடையாது. சமயக் கருத்துக்களைப் பரப்புவதையும், யாசகம் கேட்பதையுமே

முதன்மைத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் தர்காக்களில் நம்பிக்கை சார்ந்த தாயத்து, தண்ணீர், செப்புத் தகடு, வெள்ளி மோதிரம், எலுமிச்சைப் பழம் முதலியவற்றை ஓதிக் கொடுக்கின்றனர். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பக்கீர்கள் அடுத்த நாளுக்கான உணவிற்கும், உடைக்கும் உத்தரவாதமில்லாத வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர். பக்கீர் இனப் பெண்கள் யாசகம் கேட்கச் செல்லும்போது பாலியல்ரீதியான சில பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதைக் கீரனூர் ஜாகிர்ராஜா பின்வருமாறு பதிவு செய்கிறார்:

"எங்கள் ஊருக்குப் பக்கம் நடந்த ஒரு விசேசத்தின்போது மேலாடை இல்லாத அக்காவின் நெஞ்சையே வெறித்து பார்த்தபடி பிச்சையிட்ட ஒரு குடிகாரனை நான் கண்டபடி தாக்கி விட்டேன். அன்று முழுக்க அத்தா என்னைக் கொச்சை வார்த்தைகளால் குளிப்பாட்டி விட்டார். பிச்சை போட வந்தவன் கையில் பத்து ரூபாய் இருந்ததும் அதைத் தராமலே தாடையில் பதிந்த என் விரல் ரேகையைத் தடவியபடி அவன் கறுவிக்கொண்டே சென்றதும்"[8]

சமூகத்தில் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள பக்கீர் இனப் பெண்களின் உடலுக்குப் பாதுகாப்பற்ற நிலையே இருக்கிறது. மனிதாபிமான உணர்வோடு யாசகம் கேட்பவர்களை அணுகாமல் பாலியல் உணர்வோடு அணுகும் செயல்பாடு இவ்விளிம்புநிலை மக்களின் வாழ்நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாகும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் பக்கீர்கள் குடியுரிமை, ஓட்டுரிமை போன்றவற்றைப் பெற்றவர்களாக இருந்தாலும் சமூகத் தளத்தில் மிகவும் பின்னடைவையே சந்தித்து வருகின்றனர். தொடக்க காலத்தில் வாழ்ந்த பக்கீர்கள் எவ்வித உறவுகளும் இல்லாமல் ஊர் சுற்றிக் கொண்டே இருந்தனர். ஆனால் இப்போது உள்ள பக்கீர்கள் அவ்வாறு தொடர்ந்து ஊர் சுற்றிக் கொண்டு இருந்தாலும் அவர்களுக்கெனக் குடும்பம், வீடு, இருப்பிடம் ஆகியவைகளை அமைத்துக் கொண்டுள்ளனர். இருப்பிடம் அமைத்து வாழ்ந்து வந்தாலும் எவ்வகையான சமூக உரிமைகளும், வளர்ச்சிகளும் இல்லாத விளிம்புநிலை மக்களாகவே இருந்து வருகின்ற நிலைதான் இன்றும் நீடித்து வருகிறது.

## குறிப்புகள்

1. சீ.பக்தவச்ல பாரதி (ப.ஆ), தமிழகத்தில் நாடோடிகள், ப.291.
2. அ.முஹம்மது கான் ஃபாஸில் பாகவி, இஸ்லாமும் பொருளாதாரமும், ப.147.
3. அ.முஹம்மது கான் ஃபாஸில் பாகவி, இஸ்லாமும் பொருளாதாரமும்ப.143.
4. ஏ.கே.ரிபாயி, தமிழகத்தில் இஸ்லாமியர் வரலாறு, ப.214.
5. கீரனூர் ஜாகிர்ராஜா, பெருநகரக் குறிப்புகள், பக்.100-101.
6. கீரனூர் ஜாகிர்ராஜா, பெருநகரக் குறிப்புகள், ப.101.
7. கீரனூர் ஜாகிர்ராஜா, பெருநகரக் குறிப்புகள், ப.102.
8. கீரனூர் ஜாகிர்ராஜா, பெருநகரக் குறிப்புகள், ப.103.